# மார்த்தாண்டம் கல்லூரியில் புள்ளியியல் தின கருத்தரங்கு

**மார்த்தாண்டம், அக். 24–**

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் பொருளியல் துறை சார்பில் உலக புள்ளியியல் தின விழா கருத்தரங்கு நடந்தது.

விழாவிற்கு துறை தலைவர் பேராசிரியர் மணி தலைமை வகித்தார். ஜோஸ்பால் வரவேற்றார். மேல்புறம் வட்டார புள்ளியியல் அலுவலர் ரமேஷ்பாபு பேசினார். தொடர்ந்து மாணவ, மாணவியருக்கான போட்டிகள் நடந்தது.

விழா ஒருங்கிணைப்பாளர் சுனிதா நன்றி கூறினார்.

ஏற்பாடுகளை பொருளியல் துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர் செய்திருந்தனர்.